ARYA DHARMAM
TAMIL WEEKLY.

REGD. No. M. 2913

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 3
ஆறுமாத சந்தா	...	ரூ. $1\frac{1}{2}$

தனிப்பிரதி ஓரணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் பிரமாதி-ஸு மாசி-மீ 3உ 1940 ஸு பிப்ரவரி-மீ 15உ | ல-7

வாரக்குறிப்பு

(ஸ்ரீ வத்ஸ. வே. ஸோ. சர்மா)

கடுகு செத்தும் காரம் போகவில்லை !! டாக்டர் ராஜன் இன்னும் அஹங்காரத்துடன் தார்மிகரைப் பரிஹாஸம் செய்வதையும் மொளகு பொடியை பெண்கள் மீது தான் எரிந்ததை மறைத்து, பெண்கள் மௌகாய் பொடி எரிந்தனர் என்ற அபாண்ட பொய்யை விடவில்லை!

சட்ட பலம் ஆயுதமில்லையோ ? ராஜாஜி ஆயுத பலத்தால் அதர்மத்தை ஸாதிக்கலாம் அதையான் விரும்பவில்லை என்கிறார்? சட்டத்தின் பின் ஆயுதம் நிற்பதை யார் அறியார்!

பாடகரல்ல, பக்தரல்லவா ? தியாகராஜர் தினத்தைப் பலவிடங்களில் கொண்டாடினர். பாடகர்கள் அவரை வெறும் பாடகரென்றே கொண்டாடினர். அவர் பக்தியைப் பாராட்டாததும் பக்தியைக் கைகொள்ளாததும் வருந்த தக்கதே!

ஒரே கூத்து! சென்னை ப்ரஸிடென்ஸி கலாசாலை நூருமாண்டு விழா-பலர் வேஷந் தரித்தும், விளையாடியும் நாடகமாடியும் பலர் கூடி ஒன்றாக உண்டும் கொண்டாடப்பட்டது. இதில் சிறிது கூட இந்திய மார்க்கம் அவலம்பிக்கப் படாதது விசனிக்கத்தக்கது. பல மேதாவிகள் கூடினர் !!

வரி நீக்கேல் கடையடைப்போம் !! என்று திருச்சி புகையிலை வியாபாரிகள் அரசாங்கத்திற்கறிவித்திருக்கின்றனர் காங்கிரஸ் செய்த அநீதிகளை ! கவர்னர் நீக்காவிடில் நாட்டிற்கும் அரசாங்கத்திற்கும் பல கஷ்டங்கள் தோன்றும்.

ஐயோ! அடிமைகளே !! ஆங்கிலங் கற்ற சிலர் பாஷை வேஷங்களுடன் நிற்காது அவர் கொள்கைகளுக்கும் வசமானது மிக கேவலமாம், காந்தி-வைஸ்ராய் வீட்டிற்கு சகுனத்துடன் நுழைந்தார் என நிருபர் கூற நம் நாட்டுப் பத்திரிகைகளும் எழுதின என்ன சகுனம்? பூனை குறுக்கே போனதாம் நமக்கு அது சுப சகுனமல்லவா? அதற்கேற்ப பலனைப் பார்கலாம் ?

மூடியும் பயனில்லை !! திண்டுக்கல்லில் ராஜாஜீ பேச முடியாமல் ஜனங்கள் தடுத்து கூச்சலிட்டு போலீஸார் வந்து அடக்கியதை சில அடிமை பத்திரிகைகள் மறைத்தெழுதியும் தேசீய ஸபைமீதுள்ள பொது ஜந வெறுப்பை எவரால் மறைக்க முடியும்!

இதற்கா சகோதரி சங்கம் ? சிதம்பரம் அண்ணாமலை ஸர்வ கலாசாலையாலடையும் நன்மையைவிட பல தீமைகளை அடைவது தார்மிகருக்குப் ரத்யக்ஷமாம். அங்கு படிக்கும் சில மாணவிகள் சிதம்பரத்தில் புகுந்து விவாஹமான பெண்கள் பல துன்பத்திற்களாகின்றனர் என்று கூறி ஓர் சங்கத்தைத் துவக்கினர்,

பதி சட்டம் செய்வரா ? சென்னையில் தன் பத்னி இறந்த துன்பந்தாளாமல் பதி தற்கொலை செய்து கொண்டான். இங்ஙனம் பல நேர்வதால் ஸதிகள் பதிகளுடனிறக்கக் கூடாதென்பது போல் ஸதிகளுடன் பதிகளுடனிறக்கக் கூடாதென சட்டம் செய்வரோ ?

நல்ல பாடங் கற்பித்தார் !! காந்தி சீடர் சிலருக்கு விசித்ரமான புத்தி! காஞ்சீ நகர சபையில் பெரும்பாலோர் காங்கிரஸ் வாதிகளே! அவர்கள் எக்காரணம் பற்றியோ "காஞ்சீ" என்ற பெயரை மாற்றிவிட தீர்மானித்தனர். அரசாங்கம் முடியாதென்கிறது.

எச்சரிக்கை !! காங்கிரஸ் என்ன தவறு செய்தாலும் அதைக் கண்டிக்காததுடன் அதை கண் மூடி ஆமோதிக்கும் தினமணி பத்திரிகைக்கு தர்மம் கண் காக்ஷிக்குச் செய்தது போல் அக்னி மூலம் ஓர் எச்சரிக்கை செய்ததென்றே எண்ணுகிறோம். தர்மத்தை அவலம்பிப்பதே அதைப் பரிஹரிக்கும் வழியாம்.

தலைவருடன் கலந்தாரா? ஏற்கனவே ஓர் ஆஸ்திகர் நமது தலைவர் ஸ்ரீ நடேசய்யரிடமிருந்து பிரிந்து வேறு பெயர் பூண்டு ஏதோ சில வேலை செய்கிறார். நமது ராவ் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்க அங்கத்தினர் என்று தந்தி கொடுத்திருக்கிறார். இவரோ தலைவரோ தக்க தகவல் தெரிவிக்காதவரை தார்மிகர் கவலை நீங்காது.

திருப்பரங்குன்ற ஸத்யாக்ரஹம் ! வேறு சங்கம் ஆரம்பித்த மதுரை ஸ்ரீமான் வெங்கிட்ராமய்யர் ஷை ஸத்யாக்ரஹம் ஆரம்பிப்பதாக தெரிவிக்கிறார். சிரிப்பார் முன் இடரி விழாமல் யார் நல்ல வேலை செய்தாலும் நன்மையே.

நல்ல ஸமயத்தில் தந்தி! ஸ்ரீ காந்தியும் ராஜப்ரதிநிதியும் ஸந்திக்கும் சமயம் நமது தலைவர் காந்தி எங்களுக்கு ப்ரதிநிதியல்ல என்று ஸமயோசிதமான தந்தியடித்ததை மிக மிகக் கொண்டாடுகிறோம்.

மந்திரிபதவி ஏற்க விடோம்.

காங்கிரஸ் இரண்டுபடும்

தீவ்ரவாதிகள் சட்டசபைக்கு வருவார்கள்

ஸ்ரீ ஸுபாஷ்போஸ் எச்சரிக்கை

காந்தீயர்கள் வைஸ்ராயுடன் ஸமரஸம் செய்துகொண்டுவிட முயற்சிப்பதைக் கண்டித்து ஸ்ரீமான் போஸ் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். காந்தியர்கள் ஸமரஸம் செய்துகொண்டால் தீவ்ரவாதிகள் பெரிய கிளர்ச்சி செய்து காங்கிரசைப் பிடித்துக் கொள்ளவார்களென்றும், காந்தியர்கள் விலகி தனிகாங்கிரஸ் நடத்த நேரிடுமென்றும், காந்தியர்களை எதிர்க்க தீவ்ரவாதிகள் சட்டசபைக்குள்ளும் நுழைய நேருமென்றும், அதற்காக எலெக்ஷனில் தீவ்ரவாதிகள் காந்தியர்களை எதிர்த்துப் போட்டி போடுவார்களென்றும் எப்படியும் காந்தியர்கள் இனிமேல் மந்திரி பதவி ஏற்பதை தடுத்துத் தீருவோமென்றும் ஸ்ரீபோஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

சிறுபான்மையோர் உரிமை

காங்கிரஸல்லாதார் தூதுகோஷ்டி

சீமைசெல்லும்

முஸ்லீம்களும், மற்றவகுப்பு மைனரிடிகளும், காங்கிரஸ்காரரால்லாதவர்களும் சேர்ந்து மைனரிடி வகுப்பு உரிமைப் பாதுகாப்பு விஷயமாக இங்கிலாந்திற்கு ஓர் டெபுடேஷனை அனுப்புவதைப் பற்றி தீவ்ரமாக ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது அதன் விபரம் சீக்கிரம் வெளியாகுமாம்.

ஆசாரம்

(ஸ்ரீ S. வைதீஸ்வரய்யர் கல்கத்தா)

ஆஹார நியமங்கள்

பயிர், செடி, கொடிகளுக்கு உயிருப்ப தோடு நம்மைப் போலவே உணர்ச்சிகளுமி ருக்கின்றன வென்று ஸர். ஜே. ஸி. போஸ் நிரூபித்ததிலிருந்தாவது எல்லாரும் நம்பக் கூடும். வைத்ய சாஸ்திரத்தினால் அவைக ளுக்கு குணங்களிருப்பதும் அறியலாகும். காமக்ரோதாதி உணர்ச்சிகளே குணங்க ளாகின்றன. காய்கறி தான்யங்கள் கொல் லாமல் கிடைப்பதில்லை. ஜீவ ஜந்துக்கள் கொல்லப்படும் பொழுது வருந்துவது சத் தத்தினாலும் பேச்சினாலும் நமக்குத் தெரிகி றது. ஸ்தாவரங்களின் வருத்தம் தெரிய வில்லை. ஹிம்ஸை ஸமமாய்த்தானிருக்கிறது இதனாலேயே "நோன்பென்பது கொன்று தின்னாமை" என்றார். காங்கிரஸின் அஹிம் ஸை, பேச்சோடு சரி. காந்திஜியின் அஹிம் ஸை ஜங்கமங்களோடு நிற்கிறது. அதுவும் தன் மனோபாவத்தை ஒட்டியது. ஸநாதனி கள் ஸ்தாவரங்களிடங்கூட திரிகரணங்க ளாலும் அஹிம்ஸை பாராட்டுகிறார்கள். மனோபாவத்திற்கு அடிமைப்படாமல் சாஸ் திரத்திற்கு அடிமைப்பட்டவர்கள்.

ஆகார விஷயத்தில் நற்குணமும் அஹிம் ஸையும்உள்ளது சுத்தமானது. அதற்கு விதி விலக்குகள் இருக்கின்றன. ஸத்வகுணமும் அஹிம்ஸையும் பரிபூர்ணமாயிருக்கவேண்டு மானால் மூச்சை அடக்குவதே உபாயம். காந்தியடிகள் ஒரு சமயம் "நான் உயிருட னிருக்க விரும்பவில்லை. ஏனெனில் நானி ருக்குமிடத்தில் வேறு ஜீவர்கள் ஸ்தூலமாக வும் ஸூக்ஷ்மமாகவும் ஜீவிக்கலாம்" என் றார். இதைக்கண்டு உலகம் "ஆஹா எவ்வ ளவு ஜீவகாருண்யம், தியாகம்" என்று பிர மித்தன. காந்தியடிகள் இறந்தபின் சூன்ய மாகப்போகிறாரா! அவர் ஒரு பெரிய ஸநா தனியாயிற்றே! ஸ்தூல தேகம் மண்ணாகா மல் ஆகாசமானாலும் இவ்வுலகிலும் ஆத்மா வேறுலகிலும் இடத்தை அடைக்காதென்று எவ்விதம் நிச்சயம் செய்தார்? தான் பவசா கரத்திலிருந்தாலும் மனிதனாயிருந்து வேறு ஜீவர்களை திர்யக்குக்கும் கேடான ஜன்ம மெடுத்துத்தவிக்கச் செய்யும் எண்ணம் கரு ணையா! சிரத்தை. குரு உபதேசமின்றி வேதசாஸ்திரங்களைப் புரட்டி நான் பெரிய ஸநாதனி என்பவர்கள் அனாதி அவித்யா ரூபிகளே. பட்டினத்தார் ஒரு ஜீவன் முக் தர். "ஒரு முட்டையை விண்டால் உதிரும் பூச்சிகளுக்கு எவரேயமுவர்" என்று விவே கத்தைச் சொல்லியிருக்கிறார். இது விரிந்தது மன்னிக்க.

தினமும் சிறிது நேரம் மூச்ச டக்குவதால் அகப்புறச்சுத்தங்கள் உண்டா வதோடு ஹிம்ஸையின் பாபம் குறைகிறது. மதுமாம்ஸம் சாப்பிடுவது தமோகுணமும் ஹிம்ஸையும் பரிபூர்ணமாயுள்ளது. அரிவது வேகவைப்பது, அரைப்பது இவைகளும் ஹிம்ஸை. ஆகையால் விதித்தவற்றை கட வுளுக்காக என்று செய்து ஏழைகள், விருந் னர், வேலைக்காரர் இவர்களுக்கு பகுத்துக் கொடுத்து மீதியைத்தான் சாப்பிடவேண் டும். அதுவும் தன்உயிர் நீங்காதிருப்பதற்கு வேண்டியளவு ருசியைக் கவனிக்காமலும் அம்ருதமாக எண்ணிக்கொண்டும் உலகங்க ளையே போஷிப்பதாகக் கடவுள் தியானத் துடனும் சாப்பிடவேண்டும்.

இவ்வாறு உட்கொண்ட ஆகாரத்தைத்தயா ரிப்பதில்அழிந்த ஜீவவர்க்கம் படிப்படியாக மேலானபிறப்பைஎடுக்கிறது. இதுவே யாக த்திலுள்ளஹிம்ஸைக்கும்ஸமாதானம். யாக த்தில் உபயோகப்படுவதால் (டபில் ப்ரமோ ஷன்) சீக்கிரத்திலேயே மிகவுயர்ந்த பிறவி கிடைக்கிறது. பண்டிகை தினங்களில் மாத் திரம் விசேஷமான ஆகார பக்ஷணங்கள் ஈச்வரார்ப்பணமாகச் சொல்லியிருப்பதால் தினந்தோறும் அவ்வித ஆகாரங்களைக் கொ டுத்து நாக்கையும் அதனால் காம விகாரத்தை யும் வளர்க்கக்கூடாதென்பது முக்கியமாய் கவனிக்கத்தக்கது.பகுத்துக்கொடுப்பதென் றும், தனக்காகவென்றுதனிச்சமயல் கூடா தென்றும், பந்தி பேதம் கூடாதென்றும் விதிகளிருக்கின்றன. இதனால் ஒரு வேலைக் காரனுக்கு எந்த ஆகாரம் கொடுப்போமோ அதையே தான் நாமும் புசிக்கவேண்டும். உலகத்திலுள்ள நெருக்கடி ஆகாரச் சுவை யாலேயே அதிகமாகிறது.

சாப்பிடுவதில் அரைவயிறு அன்னாதி திகளும். கால் வயிறு தண்ணீரும், கால் வயிறு காற்றுமாக இருக்கவேண்டும். மாதமிருமுறை ஏகாதசிகளில் தண்ணீர் கூடக்குடிக்கக்கூடாது. தேகம் கொழுப் பதால் துர்நீர் வாத பித்தங்கள் அதிகரிக் கின்றன. வற்றுவதால் தான் சுத்தம். தேகத்தாலுழைப்பவர்களுக்கு தினம் மூன்று வேளையும், மற்றவர்கள் தேக சிர மத்திற்குத் தக்கவாறு இரண்டு மூன்று வேளையும் சாப்பிடுவது நலம். கை அசுத் தம், ஸ்பூன் சுத்தமென்று நம் நாட்டாரும் சாப்பிடுகிறார்கள். சாஸ்திர முறைப்படி சாப்பிடுவதால் ஒரு கவளத்தை மிச்ச மின்றி வாயில் போட்டுக்கொள்வதும், ஒன்றைக் கடித்துவிட்டு இலையில் வைக்கா மலிருப்பதும், தீர்த்தமானாலும் பாத்திரத் தில் மீதியின்றிக் குடிப்பதும், அவசியம் சாப்பிடவேண்டியதில் எச்சலோ, சுவாஸமோ படக்கூடாதென்ட பது தாத்பரியம். ஸ்பூனில் நக்கி நக்கியும் போர்க்கில் கடித்தும், த்ரவமில்லாததைக் கையில் வைத்துக்கடித்தும், சாப்பிடு வதும் தீர்த்தம சிறிது சிறிது உறிஞ்சுவது மான மேல்நாட்டு வழக்கம் முழு அசுத்தம். குளிர்தேசமானதால் கையை உடையி லிருந்து எடுப்பதில்லை போலும்? சாப்பிடும் பொழுது"மொச்மொச்" சென்ற ஓசையும் சூர்ரென்று உறிஞ்சுவதும் சுவாஸக்குழா யில் ஆகாரத்தில் சிறிது செலுத்தி இருமல் விக்கலுக்கிடமாகும். ஓசை கூடாது. அது மிருகங்களிடமிருக்கிறது. உப்பு, புளிப்பு, காரம், இவைகள் மிதமாக சேர்த்துக்கொள்ளவேண்டும்.

பழயது, கொதிக்கும் சூடுள்ளது, அழு கியது தகரங்களில் பத்திரப்படுத்தியது (இதை ஒரு நாள் திறந்து வைத்திருந்தால் அழுகுவதும் புழுப்பதும் தெரியும்.வயிற்றி ல்போனவுடன் புழுத்த பிறகே ஜீர்ணமா கிறது) அசுத்தமான இடத்தில் விளைந் ததும், வைக்கப்பட்டதும், ஒருவர்முகர்ந்து பார்த்ததும் அடியோடு விலக்கத்தக்கவை. யார் எந்த ஆகாரத்தைப் பார்த்தாலும் பார் பவர் முகர்ந்தவரது மனம் எவ்வளவுஆசை கொள்ளுகிறதோ அவ்வளவு அசுத்த தோ ஷம். அதற்கு உண்டாகிறது. இதனாலேயே சமையல் மறைவும், பகுத்துக்கொடுப்பதும் வேலைக்காரர்களுக்கு முதலில் போடுவதும் கடையில் வாங்காதிருப்பதும் (வேகவைத் தவைகளை இடம் விட்டு இடம் எடுத்துப் போகும் பொழுது வழியிலுள்ள அசுத்த வாயுக்களின் கிருமி அவைகளில் அடை யும்) ஏற்பட்டிருக்கின்றன. தன் மனைவி கையால் சாப்பிடுவதும் நலமில்லை. இதற்கு காரணம் அவன் இவனுக்குப் பிறகு சாப்பி டுவதும் மனச்சலனமும். தான் சாப்பிடு முன் பிச்சைக்காரர், பாலர், விருத்தர், கர்ப் பிணி, புதிதாய் விவாகமான பெண் இவர்க ளுக்கிடவேண்டும். இவ்விதமெல்லாமிருந் தால் வியாதியின்மையும், வலுவும், தீர்க்கா யுளும் புத்திகூர்மையும் எப்பொழுதும் ஊக் கமும் சந்தோஷமும் அடையலாம்.

ஆழ்வார்திருநகரி

ஸநாதன போதக்கூட்டம்

ஆழ்வார்திருநகரி ஸ்ரீ ஆண்டாள் தேவஸ் தான வாசல் முன் மண்டபத்தில் 31–1-40 புதனன்றிரவு 8-30க்கு சனாதனப் பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது பத்ரீநாத் ஸ்ரீ எஸ் வெங்கடாச்சாரியார் என்ற விசாகப்பட்டணம் சனாதனிஸ்ட் லெக் சரர் தெலுங்கில் ரமணீயமான ஓர் பிரசங் கம் செய்தார் ஸ்ரீமத் ஆத்தான் வடக்குத் திருமாளிகை ஆதீனம் ஸ்வாமிகள் தலைமை வகித்தார் ஸ்ரீ வெங்கடாச்சாரியார் பேசி யதை தலைவர் ஸ்ரீ ஸ்வாமிகளால் தமிழில் ரஸமாக மொழி பெயர்த்துரைக்கப்பட்டன உலகத்தில் சனாதன தர்மம் மிக மேன்மை பொருந்தியதென அயல்தேச அறிஞர்களும் ஒப்புக்கொண்ட விஷயமாகும். ஓர்அமெரிக் கமாது இந்தியாவில் தான் ஓர் சனாதனி யாய் பியக்கவில்லையேயென வருந்தியிருக் கிறாள் காங்கிரஸ் வாதிகள் பலர்க்கும் மத மென்றாலே இன்னதெனப் புரிவதில்லை தங்கள் மனம்போனபடி சொல்லி அதற்கு பிறர் சம்மதம் கொடுக்க வற்புறுத்து வதையே கொள்கை மதமாய் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியார் கீதையை ஆங் கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார் அதில் வர்ணாஸ்ரம தர்ம பிரஸ்தாபமே காணப் படவில்லை வர்ணாஸ்ரம தர்ம ஸ்தாபனமே ஸ்ரீ பகவத் கீதையின் முக்ய நோக்கமென் பதை ஸ்ரீமான் ஸி. ஆர் ஆச்சாரியார் அறி யார் போலும், பீஹாரில் ஸ்கூல் பாடப் புத்தகமொன்றில் பாபுராஜேந்திர பிரஸாத் தை ஸ்ரீ ராமராக சித்தரித்து மாணவர் களுக்கு சொல்லிக்கொடுக்க காங்கிரஸ் ஆக்ஷியில் அனுமதித்திருக்கிறார்கள் இதற் கெல்லால் நாம் வருந்துவதில் பிரயோஜன மில்லை உண்மையான விஷயங்களை விளக்கி நாடெங்கும் சனாதன தர்ம பிரசாரம் செய்ய, மடாதிபதிகள் ஏற்பாடு செய்யா மையே காரணமாகும். சனாதன தர்ம த்கீ ஜே என்ற கோஷத்துடன் 10½ க்கு கூட்டம் முடிவெய்தியது. (ந. கி.)

குழந்தைகளின் ஆரோக்யம்.

பரிசுத்தமான உணவுதான் ஆரோக் யத்தை கொடுக்கவல்லது. குழந்தை களுக்கு, அஜீர்ணம், கட்டி, மாந்தம், முதலிய எல்லாவித நோய்களும், புட் டிகளில், நாள்பட வைக்கப்பட்டிருக் கும் சேர்க்கையான உணவை ஊட்டு வதே. சிறு குழந்தைகளுக்கு, தாய் பால் குறைந்திடின் பயஸ்யா என்னும் கைகண்ட ரஸாயனத்தை, தாய்மார் கள் அருந்தவேண்டும். பயஸ்யா தாயின்பாலை மிகுதியாக வளர்க்கிறது. புஷ்டியாகவும் செய்கிறது.

விலை ¼ பவுண்டுக்கு 1—6—0
½ பவுண்டுக்கு 2—3—0

கிடைக்குமிடம்:—
ATREYA AYURVEDIC WORKS,
Thennore Road, Trichinopoly.

குடந்தை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

வைஸ்ராய்க்கு வேண்டுகோள்

பொதுக்கூட்டம்.

கும்பகோணம் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் ஆதரவில் 12உ திங்கட்கிழமை மாலை 7-மணிக்கு ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி ஸன்னிதியில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மஹாமஹோபாத்யாய ஸ்ரீ கிருஷ்ணமாசாரியஸ்வாமிகள் தலைமை வஹித்தார்.

கூட்டத்தின் நோக்கத்தைப்பற்றிச் சொல்லப்பட்டவுடன் கார்யதர்சி ஸ்ரீமான் நடராஜ சாஸ்திரியால் தீர்மானமொன்று பிரேரேபிக்கப்பட்டது.

கனம் வைஸ்ராய் அவர்கள் இந்தியாவிலுள்ள எல்லாக்கக்ஷித்தலைவர்களையும் அழைத்து ஆலோசனை கேட்பது போல் மிகப் பெரிய ஸ்தாபனமாகிய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் தலைவரையும் அழைக்க வேண்டுமென்றும், ஸனாதனிகளின் அபிப்பிராயம் அறியாமல் ராஜீய விஷயமாக எவ்வித முடிவும் செய்துவிடக் கூடாதென்றும் அந்த தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது. தீர்மானத்தை விளக்கி ஸ்ரீமான் நடராஜன் பேசிய பின், ஸ்ரீமான் எம். கே. வைத்தியநாதய்யர் பி ஏ. பி. எல். அவர்கள் அதை ஆமோதித்து ஸனாதனிகள் தீவ்ரமாக பிரசாரம் செய்யவேண்டிய அவசியத்தை உதாஹரணங்களுடன் விளக்கிச் சொன்னார்.

தலைவரால் தீர்மானம் வோட்டுக்குவிட்டு நிறைவேறிய பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது. (ந.நி.)

சென்னை
ஸ்ரீ ராமாயண பட்டாபிஷேகம்

சென்ற இரண்டு மாத காலமாய் நாகப்பய்யர் தெரு 57 நெ. ரத்ன விலாஸ் கட்டிடத்தில் பிர்ம்மஸ்ரீ சிரோமணி சாத்தனூர் முத்துகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களால் நடத்தப்பட்டு வந்த வால்மீகி ராமாயண பிரசங்கம் நேற்றிரவு ஸ்ரீராம பட்டாபிஷேகத்துடன் பூர்த்தியாயிற்று. காலை 10 மணிக்கு ஸ்ரீ ராமபிரானுக்கு பூஜை அர்ச்சனைகளும், 11 முதல் 1 மணி வரை பிராம்மண சந்தர்ப்பணைகளும், அதற்குப் பிறகு தெருவிலுள்ள ஏழைகளுக்கு அன்னதானமும் செய்யப்பட்டது. மாலை 7 முதல் 8½ மணி வரை பகவானுடைய ஊர்வலம் திருவட்டீஸ்வரன் பேட்டை தெருக்கள் வழியாக சிறப்பாக நடந்தேறியது. 8½ முதல் 10 மணி வரை ஸ்ரீ ராம பட்டாபிஷேக கட்டத்தைப்பற்றி சாஸ்திரிகளால் உபன்யஸிக்கப்பட்டது. அநேக ஸ்திரீ புருஷர்கள் திரளாகக் கூடியிருந்து சாஸ்திரிகளுக்கு வஸ்திரங்களும் பணமும் சன்மானம் செய்தனர். ஹிந்து பத்திராதிபர் அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யர் போலொத்த பல பிரபலஸ்தர்கள் முக்கியமாய் உதவி செய்தது குறிப்பிடத்தக்கது. சாஸ்திரிகளின் பிரவசனம் மிகவும் மனோரம்மியமாயும் தெளிவாயுமிருப்பது எல்லோருக்கும் விசேஷ ஆனந்தத்தை அளித்து வந்தது. (ந.நி.)

கோவிலூரில்
வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க ஸ்தாபனம்

கோவிலூரில் 6—2—40 மாலை 7 மணிக்கு இவ்வூர் "ஸனாதன தர்ம சம்ரக்ஷண சபையின் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது அக்கூட்டத்திற்கு அப்பா வைத்தியநாத சாஸ்திரிகள் அவர்கள் தலைமை வகித்தார்கள். பிறகு ஸ்ரீமான்கள் வி. வி. ரெங்கநாத சாஸ்திரிகள் மதுரை வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத் தலைவர் என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார் காரைக்குடி ஸனாதன சபை காரியதரிசி சேவு. மெ. மெய்யப்ப செட்டியார் செட்டி நாடு பத்திரிகை ஆசிரியர் எ. எஸ். சர்மா முதலியோர் சொற்பொழிவு செய்தார்கள்.

ஸ்ரீமான் என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார் பேசும்பொழுது மதுரையிலிருக்கும் நான்கு ஸ்தாபனங்களாகிய, வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கம், ஆஸ்திக மாதர் சங்கம், ஸனாதன தர்ம வித்யாலயம், தார்மிக யுவர் சங்கம் முதலியவற்றின் கருத்துக்களை எடுத்துரைத்து, அதுபோல் எல்லா ஊர்களிலும் ஸ்தாபிக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்,

பிறகு தலைவர் என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார் விஜயம் செய்ததை பாராட்டியும், தர்மத்தை காப்பாற்ற எல்லோரும் முன் வர வேண்டுமென்றும் தெளிவாகப் பேசினார்கள்.

பிறகு இந்த "எஸ். டீ. எஸ்." சபையை காரைக்குடி ஜில்லா வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்தின் கிளையாக இணைப்பதாய் ஓர் தீர்மானமும், இன்னும் ஐந்து தீர்மானங்களும் நிறைவேறின.

பிறகு யாவருக்கும் காரியதரிசி கே. எ. ராமசாமியால் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது இரவு 11–30 மணிக்கு கலைந்தது.

காரியதரிசி.

ஸனாதனத் தலைவர்கள்
கவர்னரைக் கண்டனர்.

ஏற்கனவே அறிவித்தபடி மதுரைத்தலைவர்கள் 10உயன்று சென்னையில் கவர்னரைப் பேட்டிகண்டு ஆலயப்பிரவேச சட்டத்தை ரத்துசெய்ய வேண்டிய அவச்யத்தைப் பற்றி வற்புறுத்திச் சொன்னார்கள். சுமார் ஒருமணி நேரத்திற்கு அதிகமாக ஸம்பாஷணை நடைபெற்றது. கவர்னர் அமைதியாக விஷயங்களைக் கேட்டார் ஆலோசகர்களில் ஒருவரான கனம், ருதர் போர்டும் அச்சமயம் கூட இருந்தார்.

டெபுடேஷனில் தலைவராக ஸ்ரீபண்டார ஸன்னதிகள் இருந்தார். ஸ்ரீமான்களான பி. ஸி. முத்துசெட்டியார், எல். கே. துளஸிராம், கே. ராமய்யங்கார் என். எஸ். விச்வநாதய்யர், ஆர். கணபதி அய்யர் முதலியவர்கள் டெபுடேஷன் மெம்பர்களாகப் போயிருந்தார்கள்.

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

திண்டுக்கல்

4—2—40-ல் திண்டுக்கல் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் மடத்தில் ஷை ஸங்கத்தின் கூட்டமொன்று நடைபெற்றது. அட்வகேட், ஸ்ரீமான் வி. ஆர். விஸ்வநாத அய்யர் தலைமை வகித்தார்.

மதுரை பிர்ம்மஸ்ரீ ராவ்சாகேப் ஸ்ரீ நடேசய்யரவர்களிடம் நம்பிக்கையை வெளியிட்டும், வர்ணாச்ரம ஸங்கத்தின் பெயரால் அவர் நடத்தி வரும் கார்யங்களுக்கு, முக்யமாக ஆலயப்பிரவேச எதிர்ப்பு இயக்கத்திற்கு ஆதரவு அளித்தும் தீர்மானம் செய்யப்பட்டது.

திண்டுக்கல் ஸங்கத்தின் ஆதரவில் நடந்து வரும் வேத பாடசாலையின் 2-வது வருஷ பூர்த்தி விழாவில் ராவ்சாகேப் ஸ்ரீ நடேசய்யரைத் தலைமை வகிக்கும்படி வேண்டியும் ஸங்கத்திற்குப் பண உதவி செய்யும்படி வேண்டிக்கொண்டும், காயதரிசியான ஸ்ரீ தியாகராஜ தீக்ஷிதர் பி. எ, எல். டி. அவர்களின் ராஜிநாமாவை அங்கீகரிப்பதாயும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஸ்ரீமான் விஸ்வநாதய்யர் தலைமையில் புதிய நிர்வாஹ ஸபை அமைக்கப்பட்டது. ஸ்ரீ ஸாமிநாதய்யர் காரியதரிசி. ஸ்ரீ பால ஸுப்ரமண்யம் உதவி காரியதரிசி.

(ந.நி.)

காங்கிரஸ் தலைவர் தேர்தல்

அஸாத்துக்கு எம். என். ராய் போட்டி

இவ்வருஷ மார்ச்சு மாதத்தில் ராம்காரில் நடக்கப்போகும் காங்கிரஸ் மஹாஸபைக்கு அபுல்கலாம்அஸாத் அபேக்ஷகராக நிறுத்தப்பட்டிருக்கிறார்.

இவருக்குப் போட்டியாக, அபேதவாதக் கக்ஷியைச் சேர்ந்த ஸ்ரீமான் எம். என். ராய் போட்டி அபேக்ஷகராக நிற்கிறார். காந்திய மிதவாதிகளை காங்கிரஸை விட்டு விலக்கவேண்டிய அவசிய மேற்பட்டிருக்கிறதாக ஸ்ரீராய் தமது அறிக்கையில் சொல்லியுள்ளார்.

தினமணி ஆபீஸில் தீ

சென்னையிலுள்ள, தினமணி, இந்தியன் எக்ஸ்ப்ரெஸ், ஆந்திரபிரகாசிகா, என்ற பத்திரிகைகளின் ஆபீஸில் 2 தினங்களுக்கு முன் தீ பிடித்து எரிந்தது.

ஏராளமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதாம். தீயணைக்கும் இஞ்சினும், அதிகாரிகளும் இரவு முழுவதும் தீயை அணைக்க உதவிபுரிந்தனர்.

இதன் காரணமாக மேற்படி பத்திரிகைகள் சில நாள் வெளிவரமுடியாமல் நிற்க வேண்டியதாயிற்று.

ஸ்ரீ N. ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகள் பிரசுரங்கள்.

சிவகீதிமாலா	0	4	0
ராமாஷ்டோத்தரம்	0	1	0
சங்கரபகவத் பாதாள் நாடகம்	0	8	0
தமிழ் சீக்ரரேகா	0	4	0
ஷை திக்பேப்பர்	1	0	0

கிடைக்குமிடம்.— ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்,

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஸூ மாசி-மீ 3உ

திருவாங்கூரில் விவாஹச்சட்டம் நிறைவேறவில்லை.

திருவாங்கூரில் சீர்திருத்தவெறிகொண்ட ஒரு நாயர் ஸ்திரீயால் சாரதாச்சட்டம் போன்ற பால்ய விவாஹத் தடை மசோதா ஒன்று கொண்டுவரப் பட்டிருந்ததை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். அந்த மசோதாவிலிருந்து பிராம்மண ஸமூஹத்திற்கு சில விலக்குகள் செய்துகொடுக்க வேண்டுமென்ற திருத்தத்துடன் அது பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பப்பட்டிருந்தது. அதன் பரிசீலனை முடிந்தபிறகு மேற்படி மசோதாவானது ஸ்ரீ மூலம் ஜனப்பிரதிநிதி ஸபையில் நிறைவேறியிருந்தது.

ஆயினும் அந்த ஸம்ஸ்தானத்தின் உயர்தர ஸபையாகிய "சித்ரா" பிரதிநிதி ஸபையில் இந்த மசோதா விவாதத்திற்கு வந்ததும் பொறுப்பாளிகளான சில பெரிய மனிதர்கள் இந்த மசோதாவை பலமாக எதிர்த்துப் பேசினார்கள். அதன்மேல் ஸர்க்காரும், மெம்பர்களும் இந்த மசோதாவை நிறைவேற்ருமல் நழுவ விட்டுவிட்டார்கள். ஆகவே அந்த ஸம்ஸ்தானத்தில் பால்ய விவாஹத் தடை முயற்சியான பயன்படாமல் போய்விட்டது. இது ஆஸ்திகர்களுக்கு ஆறுதலைக் கொடுக்கக்கூடிய ஸந்தோஷச் செய்தியாகும்.

சிறிதுகாலத்திற்கு முன் ஹைதராபாத் ஸம்ஸ்தானத்திலும் பிராம்மண ஸமூஹத்தை உத்தேசித்தே இத்தகைய மசோதா ஒன்று சீர்திருத்தக்காரர்களால் கொண்டுவரப்பட்டும் அது நிகாரிக்கப்பட்டது ஞாபகமிருக்கலாம்.

திருவாங்கூர் ஸம்ஸ்தானம் நவீன நாகரீகச் சீர்திருத்த வழியில் வேகமாகப்போய்க்கொண்டிருப்பது தெரிந்தவிஷயம். அப்பிருந்தும் அங்கு இந்த சீர்திருத்த மசோதாவை நிறைவேற்ற உத்ஸாஹமும், பிடிவாதமும் இல்லாமல் போனதற்கு காரணமென்ன? மலையாளிகளாகிய நம்பூதிரிகள் நாயர்கள் முதலிய வகுப்பாரின் ஆசாரப்படி அவர்களுக்கு இத்தகைய தடை மசோதா ஒன்று அநாவச்யமானதே. அப்படியிருந்தும் ஒரு நாயர் ஸ்திரீயானவள், அங்கு குடியேறியுள்ளவர்களும், வேறுவித ஆசாரமுள்ளவர்களுமான சிறுபான்மை பிராம்மண ஸமூஹத்தைப் பழிவாங்கும் உத்தேசத்துடனும், தனது பிரஸித்தியைக்கருதியும் இந்த மசோதாவைக்கொண்டு வந்திருந்தாள், ஆகவே பெரும்பான்மையான மலையாள ஜனங்களுக்கு இந்த மசோதா அவச்யமில்லாததை ஸர்க்காரும், ஜனப்பிரதிநிதிகளும் அறிந்துக் கொண்டிருக்கவேணும்.

இது ஒரு காரணமாகக் கூறப்படினும் உண்மையில் வேறு காரணமிருப்பதாகவும் நினைக்க வேண்டியிருக்கிறது. எந்த விஷயத்திலும் ஆரம்பத்தில் தீவ்ர உத்ஸாஹம் காட்டி, அதில் உள்ள ஸாதகபாதகங்களைக் கூட கவனியாமல் பிடிவாதத்துடன் அதை நிறைவேற்ற முயற்சிப்பது மனித வழக்கம். பிறகு சிறிது காலம் சென்றதும் அந்த உத்ஸாஹம் மாறி அச்ரத்தை அதிகரிப்பதும் உலக இயற்கை.

மிஸ்மேயோ புஸ்தகமெழுதி பால்யவிவாஹத்தைப் பரிஹஸித்தாள். சீமையிலுள்ள சீர்திருத்த வெள்ளைக்காரிகளெல்லாம் கேலி செய்தனர். இந்திய ஸ்வராஜ்யத்திற்கு பால்ய விவாஹமே தடையாயிருப்பதாக ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டது. தீர்க்காலோசனையும், பகுத்தறிவும், ஸ்வாபிமானமும் இழந்த இந்திய ராஜீய வாதிகளும் சீர்திருத்தக்காரர்களும் பால்ய விவாஹத்தை ஒழிக்கவேண்டுமென்று ஒத்து ஊதத் தொடங்கினர். சீர்கெட்ட ஸ்திரீகளையும் கிளப்பிவிட்டனர். தேசம் முழுவதும் ஒரே பேச்சு. மூலை முடுக்குகளிலும் பலத்த பிரசாரம்.

"பால்ய விவாஹம் மூட ஆசாரம், தேகபலம் நசிக்கிறது, அவமானமாயிருக்கிறது. குழந்தைகளுக்கு கல்யாணமா? குழந்தைகள் பிரஸவிப்பதா? இந்தியாவில் என்ன வெட்கக்கேடு. இந்த துராசாரத்தை அழிக்கவேணும்" இந்த பேச்சுத்தான் எங்கு போனாலும். கிளிப்பிள்ளைபோல் சொன்னதையே சொல்லிக்கொண்டு தேசம் முழுவதும் ஒரே விஷமப் பிரசாரம் நடந்தது.

அந்த நிலைமையில் இந்தியா சட்டஸபையில் விவாஹத்தடை மசோதாவைச் சட்டமாக்கினார்கள். நல்ல ஸமயத்தில் காந்திமஹானும் அதற்கு ஆதரவு கொடுத்து 18 வயது வரை தடைசெய்ய வேண்டுமென்று தந்தி கொடுத்தார்.

இப்போது அந்த வேகம் தேசத்தில் காணப்படுகிறதா? திருவாங்கூர் பிரதம சட்டஸபையும், ஹைத்ராபாத்தும் இந்த சீர்திருத்தத்தை நிறைவேற்ற சிரத்தை கொள்ளாததிலிருந்து சீர்திருத்த வெறியின் வேகம், விவேகம் காரணமாகக் குறைய ஆரம்பித்திருக்கிறதென்று நினைக்கவேண்டியிருக்கிறது.

இந்தியா சட்டஸபையில் நிறைவேறியுள்ள சாரதாச்சட்த்தையும் ரத்துசெய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது. ஒரு சீர்திருத்தத்தைச்செய்யும்போது மற்றொரு விடத்திலிருந்து அதற்குப் பின்பலமாக உதாஹரணம் காட்டுவது வழக்கம். இப்போது திருவாங்கூர் முதலியவைகள் பால்யவிவாஹத் தடை மசோதாவைத் தள்ளிவிட்டன. இந்த உதாஹரணத்தைக்கொண்டு சாரதாச் சட்டத்தையும் ரத்துசெய்யவேண்டியதே, நியாயமல்லவா? சாஸ்திர வச்யர்களான ஆஸ்திக ஸமூஹத்தினரின் மத அநுஷ்டான ஸ்வதந்திரத்தில் பிரவேசித்து சட்டம் செய்வது தகாதென்பதே திருவாங்கூர் தீர்ப்பின் முடிவாகும்.

அங்குள்ள திவான் ஸர் ஸி. பி. சீர்திருத்தவாதிதான். ஆயினும் சட்டமூலமாக விவாஹவிஷயத்தில் நிர்ப்பந்த மேற்படுவதை அவர் விரும்பாதவர். தஞ்சைஜில்லாவிலிருந்து இந்தியா சட்டஸபைக்கு ஸர். ஸி. பியும், ராஜாபஹதூரும் போட்டியிட்ட காலத்தில், ஸர் ஸி. பி. சாரதாச்சட்டத்தை ரத்து செய்ய உதவியளிப்பதாக எழுத்து மூலம் குடந்தையில் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். ஆதலால் சீர்திருத்த வாதிகள் கூட சாரதாச் சட்டத்தை ரத்து செய்வது அவச்யமென நினைக்கிறார்கள். ஸர். ஸி. பி. விரும்பியிருந்தால் திருவாங்கூரில் இந்த மசோதா நிறைவேறியிருக்காதா? சட்டமூல நிர்ப்பந்தம் கூடாதென்றே அவர் கருத்து. கனம், ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார், ஸ்ரீமான் டி. ஆர். வெங்கடராமசாஸ்திரி, ஸர் ராமஸாமிமுதலியார் முதலானவர்களும் இந்த அபிப்ராயத்தையே வெளியிட்டிருக்கிறார்களல்லவா? ஆதலால் இந்தியா கவர்ன்மெண்டாரும் இந்தியாசட்டஸபை மெம்பர்களும் தேசத்தில் ஏற்பட்டுள்ள மாறுதலைக் கவனிப்பது அவச்யம்.

மிராசுதார்களுக்கு தஞ்சை போர்ட் அநீதி!

சென்னை கவர்ன்மெண்டார் இவ்வருஷத்திலும் 75 லக்ஷ ரூபாய் நிலவரி வஜா செய்ய உத்திரவிட்டிருப்பது தெரிந்த விஷயம். நாம் செலுத்தும் கிஸ்தியில், ரோட் வரி, கல்வி வரி முதலியவை மூலமாக ஜில்லா போர்டாரும் சிறிது வீதம் பெறுகிறார்கள். ஆதலால் கவர்னமெண்டார் வரியைக் குறைக்க முன் வரும்போது, ஜில்லா போர்டாரும் தங்கள் ஸெஸ் வீதத்தில் தள்ளுபடி செய்யவேண்டியது அவசியமாகிறது.

இவ்வருஷம் கவர்ன்மெண்டார் தள்ளிக் கொடுக்க முன் வந்திருக்கும் தொகையில், தங்களது வீதத்தைத் தள்ளிக் கொடுக்க முடியாதென்று தஞ்சை ஜில்லா போர்டார் கூறி விட்டனர். ஆகவே கவர்ன்மெண்டார் வரி வஜா செய்த போதிலும், ரோட் வரி, கல்வி வரி போன்றவைகளை எவ்விதக் குறைவுமில்லாமல் நமது மிராசுதார்கள் செலுத்தித் தீரவேணும். வரி வஜாவின் பயனை மிராசுதார்கள் பூர்ணமாக அநுபவிக்க முடியாமல் தஞ்சை போர்டார் செய்து விட்டனர்.

இது மிராசுதர்களுக்குச் செய்த பெரிய அநீதியாகும். நமது ஜில்லா போர்ட்டில், பாமரர்களுக்குப் பரிந்து கண்ணீர் சொரியும் காங்கிரஸைச் சேர்ந்த மெம்பர்களே அதிகமென்பது தெரிந்த விஷயம். அந்த கருணாமூர்த்திகள் தான் நமது ஏழை மிராசுதார்களுக்கு மேற்கண்ட 'உபகாரம், செய்தனர்! அந்தோ! நமது மிராசுதார்கள் வோட் மூலம் பெருவாரியாகக் காங்கிரஸ்காரர்களை ஜில்லா போர்டுக்கு அனுப்பியதின் பிரதிபலனோ இது? வெள்ளைக்காரராகிய கவர்னரும், அவரது ஆலோசனையாளரும், நம் ஏழை மிராசுதார் மீது காட்டிய இரக்கம் கூட நமது இனத்தாராகிய போர்டாருக்கு இல்லையே!

தஞ்சைஜில்லாவில் நிலவரிக் கொடுமையே முக்யபிரச்னை. எலெக்ஷன் காலத்தில் காங்கிரஸ்காரர் பேசிய நயவார்த்தைக்கு அளவில்லை. 2½ வருஷமாக ஒன்றும்செய்யாமல் ஒடிவிட்டார்கள். இப்போது கிடைத்த ஸ்வல்ப நன்மையையும் ஜில்லா போர்ட் காங்கிரஸ்காரர்கள் பாழாக்கி விட்டனர்.

மிராசுதார்கள் இந்த அநீதியை உணர்ந்ததாகத் தெரியவில்லை. ஜில்லா போர்டின் செய்கையை அவர்கள் கண்டிக்க வேண்டாமா?

ஜில்லா மிராசுதார் ஸங்கத்தாரும் இதில் என்ன நடவடிக்கை எடுத்தார்களென்று தெரியவில்லை. வரியைக் குறைப்பதே தங்

(தொடர்ச்சி 5ம் பக்கம் பார்க்க)

பிர்ம்மஸ்ரீ நடேசய்யர் சுற்றுப் பிரயாணம்.

பலவிடங்களில் ஸங்க ஸ்தாபனம்

ஸனாதனத் தலைவர் மதுரை ராவ்ஸாஹேப் பிர்ம்மஸ்ரீ என். நடேசய்யர் மாயவரத்திற்கு ஸமீபத்திலுள்ள தமது கிராமமாகிய ஆறுபாதிக்கு எழுந்தருளிய ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகளவர்களுக்கு பிக்ஷை செய்விக்கவேண்டி மதுரையிலிருந்து ஸனாதன பிரசார கோஷ்டியுடன் ஆறுபாதிக்குவந்து ஸ்ரீ ஆசார்யாளுக்கு வெகு சிறப்பாக பிக்ஷை நடத்திவைத்தார்கள்.

மாயவரத்தில் பிரசாரம்

பிறகு தமது கோஷ்டியாருடன் 12௳ திங்கள்கிழமை மாலை மாயவரத்திற்கு விஜயம் செய்தார். அன்று மாலை 6½ மணிக்கு மஹாதானத்தெரு அம்பாபாய் ஸத்திரத்தில் பெரிய பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஏராளமாக ஜனங்கள் கூடியிருந்தார்கள். நகரப்பிரமுகர்களும் வந்திருந்தனர் 'செட்டிநாடு' பத்திராதிபர், ஸ்ரீமான் மெய்யப்ப செட்டியார், பிர்ம்மஸ்ரீ என். ஆர். கிருஷ்ணஸாமி அய்யங்கார் அட்வகேட், மதுரை. சென்னை பிர்ம்மஸ்ரீ டி. எஸ். ராமஸ்வாமி அய்யர், ராவ்ஸாஹேப் ஸ்ரீநடேசய்யர் முதலியவர்கள் ஆலயப்பிரவேச சட்டத்தைக் கண்டித்தும், அதை ரத்து செய்யவேண்டிய வழியைப்பற்றியும் வெகு விரிவாகப் பேசினார்கள்.

மாயவரத்தில் பிரபலஸ்தர்களடங்கிய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டது. வந்தனோபசாரத்துடன் கூட்டம் அமைதியாக முடிந்தது.

சீயாழியில் ஸங்க ஸ்தாபனம்.

13௳ செவ்வாய்க்கிழமையன்று ஸ்ரீ நடேசய்யரும் அவரது கோஷ்டியாரும் சீயாழிக்கு வந்தார்கள். அன்று மாலை அங்கு நடந்த பெரிய பொதுக்கூட்டத்தில் தலைவர்கள் ஆலயப்பிரவேசச் சட்டத்தைக் கண்டித்துப் பேசினார்கள்.

சீயாழியிலும் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் கிளையொன்று ஸ்தாபிக்கப்பட்டது

கும்பகோணத்திற்கு ஸ்ரீ நடேசய்யர் விஜயம்

பெரிய பொதுக்கூட்டம்

13௳ செவ்வாய்க்கிழமை மாலை ஸ்ரீ நடேசய்யரும் ஸ்ரீமதிகளான மீனாக்ஷியம்மாள், சேஷலக்ஷ்மி அம்மாள் முதலியவர்களுக்கும் கும்பகோணத்திற்கு வருவதாக தகவல் கிடைத்ததும் தண்டோரா மூலமாயும், நோட்டீஸ் மூலமாயும் அது பொது ஜனங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி கோவில் வாசலில் இரவு 7½மணிக்குப் பெரிய பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது. ஜனங்கள் ஏராளமாகக் கூடியிருந்தனர், காங்கிரஸ் வாதிகளும் வெகுபேர் வந்திருந்தனர். ஸ்திரீகளும் வெகு அதிகமாகக் கூடியிருந்தனர்.

சீயாழியிலிருந்து ஸ்ரீ நடேசய்யர் வருவதற்குச் சிறிது தாமதம் ஏற்பட்டபடியால் பொது ஜனங்களின் விருப்பப்படி ஸ்ரீமான் அக்கினி ஹோத்ரம் ராமானுஜதாதாசாரியார் "அரசியல் நெருக்கடியும் சனாதனிகளின் கடமையும்" என்பதைப் பற்றி வெகு விரிவாக 1½ மணி நேரம் பிரஸங்கம் செய்தார். காங்கிரஸ் வாதிகள் சிலர் குறுக்கிட்டுக் கேட்ட கேள்விகளுக்கும் தக்க பதில் அளித்தார்.

பிறகு சுமார் 9மணிக்கு ஸ்ரீ நடேசய்யரும் மற்றவர்களும் கார் மூலமாகக் கூட்டம் நடக்குமிடத்திற்கு வந்ததும் பலத்த கரகோஷத்துடன் வரவேற்கப்பட்டனர்.

குடந்தை வர்ணாச்ரம ஸங்க கார்யதர்சி ஸ்ரீமான் நடராஜய்யரின் பிரேரேபணையின் மேல் ஆர்ய தர்மம் பத்ராதிபர் பிர்ம்மஸ்ரீ அக்னி ஹோத்திரம் கோபாலதேசிகாசாரியார் கூட்டத்திற்கு தலைமை வகித்து, முதலில் மதுரை ஸ்ரீமதி மீனாக்ஷி அம்மாளையும், ஸ்ரீமதி சேஷலக்ஷ்மி அம்மாளையும் ஸபையோருக்கு அறிமுகம் செய்து வைத்து அவர்களைப் பேசும்படி கேட்டுக்கொண்டார்.

ஸ்திரீகளுக்காக ஏற்பட்டிருந்த பிரத்யோக இடத்தில் ஸ்திரீகள் மத்தியில் நின்றுக்கொண்டே அவர்கள் பேசினார்கள். முதலில் ஸ்ரீ மீனாக்ஷியம்மாள் பேசுகையில் காங்கிரஸ்காரர்கள் ஸனாதனிகளின் கூட்டத்தில் வந்து அமைதியாக இராமல், வீண் கூச்சல் போட்டும், கேள்வி கேட்டும் இடைஞ்சல் செய்யும் கெட்ட வழக்கத்தை வெகு பலமாகக் கண்டித்தார். இந்த மாதிரி ஆர்ப்பாட்டங்களுக்கு ஸனாதனிகள் பயப்படமாட்டார்களென்று, கூறினார். ஆலயப்பிரவேச அக்கிரமத்தால் மதுரை வாஸிகள் அடைந்துள்ள துக்கத்தையும், காங்கிரஸ் மந்திரிகளின் மூர்க்கத்தனமான செய்கையைப் பற்றியும் வெகு தீவ்ரமாக கண்டித்துப் பேசினார்.

பிறகு மதுரை ஸ்ரீமதி சேஷலக்ஷ்மி அம்மாள் பேசுகையில், மதுரையில் நடந்த திருட்டுத் தனமான ஆலயப்பிரவேசத்தை நன்கு விளக்கியும், ஸி. ஆர். நடத்தைகளையும், அவஸரச் சட்டத்திற்காக கவர்னர், வைஸ்ராய்களிடம் சரணாகதியடைந்ததையும், வைகை மண்டபத்தில் ஸி. ஆர். முன்பாக காங்கிரஸ் மூர்க்கர்கள் ஸனாதனிகளைப்படுகாயம் படுத்தின அந்யாயத்தையும், டாக்டர் ராஜன் திருவிளையாடல்களையும் வெகு உருக்கமாயும், தீவ்ரமாயும் குறிப்பிட்டு, மந்திரிகளின் பொய் பிரசாரம் பத்திரிகைகளின் பக்ஷபாதம், காந்திஜியின், முன்பின் விருத்தமான செய்கை பேச்சு, காந்தீயத்தினால், குடும்பங்களுக்கும், தேசத்திற்கும், தர்மத்திற்கும், ஸன்மார்க்கத்திற்கும் ஏற்பட்டுள்ள அபரிதமான தீங்குகள் முதலியவைகளை உதாஹரணங்களுடன் வெகுவாக விவரித்துக் கூறி ஸபையோா மனதைப் பரவசமாக்கினார்.

பிறகு பிர்ம்மஸ்ரீ நடேசய்யரவர்கள் பேசுகையில் மதுரையில் போக் துரையைப் பேட்டிகண்ட விஷயத்தை பிரஸ்தாபித்து கவர்ன்மெண்டார், ஆலயப் பிரவேசச் சட்டம் நியாயமற்றதென்பதை நன்கு தெரிந்துகொண்டிருப்பதாகவும். பொது ஜனங்களின் தீவ்ரமான எதிர்ப்பையும் ஸர்க்கார் நன்கு தெரிந்துகொண்டிருப்பதாக கனம் போக் துரை சொன்னதாயும், சட்டத்தை ரத்து செய்யும் விஷயமாக சில ஆலோசனைகளைக் கூறும்படி கனம் போக் கேட்டதற்கு தாம் சில யோஜனைகளைச் சொல்லியதாயும், அதன்படி செய்வதாக போக் துரை ஒப்புக்கொண்டாராயினும், ஸ்ரீமான் ஸி. ஆர். பயந்து கவர்னரிடம் போய் விஷமம் செய்து கார்யத்தைக் கெடுத்துவிட்டதாயும் வைஸ்ராயும், தயங்குவதாயும், ஆகையால் ராஜ சக்ரவர்த்தி மூலமோ, அல்லது புதிய சட்டஸபை மூலமோதான் பரிஹாரம் ஏற்படவேண்டியதாயிருக்கிறதென்றும், புதிய சட்டஸபைக்கு ஸனாதனிகளோ, அல்லது ஆலயப்பிரவேச எதிரிகளோ அதிகமாகப் போகவேண்டுமானால், வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தை எங்கும் ஸ்தாபித்து வலுப்படுத்தி மெம்பர்களை அதிகமாகச் சேர்க்கவேணுமென்றும், காங்கிரஸ் மெம்பர்களைவிட நமது ஸங்க மெம்பர்கள் எங்கும் அதிகமாகவேணுமென்றும், அப்போதுதான் நாம் சட்டஸபையில் புக ஸௌகர்யமேற்படுமென்றும் சொல்லி, ஸனாதன வித்யாலயங்களையும், ஸ்திரீ ஸங்கங்களையும் ஆங்காங்கு ஏற்படுத்தும்படி வேண்டிக்கொண்டார்.

அய்யங்கார் தெரு ஸனாதன வாலிபர் சார்பாக ஸ்ரீ அய்யருக்கு மாலையிட்டு உபசரிக்கப்பட்டபிறகு ஸ்ரீ நடராஜய்யரால், தலைவருக்கும், ஸ்ரீநடேசய்யர், ஸ்திரீ உபந்யாஸகர்களுக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 11 மணிக்கு ஸபை அமைதியாகக் கலைந்தது. ந-நி.

திருச்சியில் ஸி. ஆர். கூட்டத்தில்

செருப்பு வீச்சு ?

சென்னை "மெயில்" பத்திரிகையில் காணப்படும் விவரப்படி, திருச்சியில் சில தினங்களுக்கு முன், ஸ்ரீமான் ஸி. ஆர். பொதுக்கூட்டமொன்றில் பேசிக்கொண்டிருக்கும்போது காங்கிரஸுக்கு எதிரான சிலர் மேடை மீது ஏறி சில கேள்விகளுக்கு பதில் சொல்லும்படி அவரைக்கேட்டனர். கூட்டத்தில் கலவரம் ஏற்பட்டதுடன் மேடைமீது ஏறிய வரை பலாத்காரமாக வெளியே கொண்டு போனார்களாம்.

இச்சமயம் ஸி. ஆர். நின்று கொண்டிருந்த இடத்தை நோக்கி செருப்பு ஒன்று விசியெறியப்பட்டது. அது அவர் மீது படவில்லை.

இச்சம்பவம் காரணமாக போலீஸார் இரண்டொரு வரைக்கைது செய்திருப்பதாயும் மெயில் நிருபர் கூறுகிறார்.

(4ம் பக்கம் தொடர்ச்சி)

கள் நோக்கமென்று ஸங்கத்தார் சொல்லி வருகிறார்கள். அந்த வழியில் பாடுபட்டு கிளர்ச்சி செய்தும் வருகிறார்கள். பிரகிருத விஷயமும் ஸ்ங்கத்தின் வேலையில் சேர்ந்ததல்லவா? போர்டாரின் செய்கையைக் கண்டித்துக் கிளர்ச்சி செய்து மிராசுதார் நன்மையை பாதுகாக்க ஸங்கம் தவறிவிட்டால் இனி ஒரு போதும் அது நிலவரிக் குறைவுக்காகப் பரிந்து பேச தகுதியற்றதாக மதிக்கப்படும்.

சென்னை ஸ்ரீ பிரஹ்ம வித்யா விமர்சினீ ஸபையாரால் பிரசுரிக்கப்பட்ட பிரசுரங்கள்.

ஸ்ரீ நாகர விமர்சனம்	0	12	0
குருதத்வ விமர்சனம்	0	5	0
வரிவஸ்யா ரகஸ்யம்	1	0	0
வித்யாசபர்யா பத்ததி	2	0	0
ஞானப்ரகாசம்	0	10	0
மனீஷா பஞ்சகம்	0	5	0
ஸ்ரீ லலிதா த்ரிசதி பாஷ்யம்	1	0	0

கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்தந பிர்ண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட் கும்பகோணம்

ஸனாதன தர்மமே ஒப்பற்ற வைத்யம்

திப்பிராஜபுரம் ப்ரும்ம வித்யா ஸபாவில் மந்த்ரமூர்த்தி ப்ரும்மஸ்ரீ க்ருஷ்ண சாஸ்திரிகளால் உபன்யஸிக்கப்பட்டது.

ஸனாதன தர்மமென்பது அனாதி காலமாய் அநுஷ்டிக்கப்பட்டு வரும் வர்ணாச்ரம தர்மந்தான். ப்ருப்மண, க்ஷத்ரிய, வைச்ய, சூத்திரர்களால் அனுஷ்டிக்க வேண்டிய தர்மங்கள் வர்ண தர்மங்கள். ப்ரும்மசாரி க்ருஹஸ்த வானப்ரஸ்த ஸன்யாஸிகளால் அனுஷ்டிக்கவேண்டிய தர்மங்கள் ஆச்ரம தர்மங்கள் இதுகள் தவிர ஸாமான்ய தர்மங்கள் சிலது, அதாவது அஹிம்ஸை ஸத்யம் திருடாமை பிறர் மனைவி பொருள்களை இச்சிக்காமை தயை கபடமின்மை, எந்த கஷ்டத்திலும் பொறுமை தைர்யம், உட்கொள்ளத்தகாத வஸ்துக்களை உள்கொள்ளாமை கண் காது மூக்கு இம்மூன்றையும் உபயோகப்படுத்தக் கூடாத விஷயங்களை தவிர்த்தல், காமம் க்ரோதம் லோபம், மோஹம், மதம், மாச்சர்யம் ஈர்ஷ்யை, அசூயை, கர்வம் முதலான மனோவிகாரங்களை தவிர்த்தல், புண்ய தீர்த்த புண்ய க்ஷேத்ரங்களை சென்று பக்தி ச்ரத்தையுடன் புராணச்ரவணம் செய்து ௸ தர்மங்களை தெரிந்து கொள்ளல் சக்திக்குத் தக்கபடி தானம்செய்தல் இதுகளெல்லாம் ஸ்த்ரீகள் முதலான ஸர்வ ஜாதி ஜனங்களாலும் அனுஷ்டிக்கக்கூடிய ஸாமான்ய தர்மங்கள் ௸ தர்மங்களும் ஸாமான்ய தர்மங்களும் வைத்யமாகச் சொல்லப்பட்டவைகள்

அத்யவோசததி வக்தாப்ரதமோ
தைவ்யோ பிஷக்— என்று

ஆயுர்வேதம் போன்ற வேதமோதிய ஸாக்ஷாத் ஈச்வரன் ஆதியிலுதித்த வைத்யர். பிறகு

யத்வைகிஞ்ச மனுரவதத்தத்பேஷஜம்

என்ற வேதப்படி ஸ்வாயம்புவமனுப்ரஜாபதி 2வது வைத்யர்

அமார்கேண ப்ரவ்ருத்தாநாம்வ்யாகு
லேந்த்ரிய சேதஸாம் —நிவர்த்தகம்
தர்ம சாஸத்ரம் வ்யாதீநாமிவபேஷஜம்
ராகத்வேஷாக் நிதக்தானாமக்ஞாநவிஷ
பாயினாம்—சிகித்ஸாதர்ம சாஸ்த்ராணி
வ்யாதீநாமிவபேஷஜம்.

என்று எழுதிய தர்ம சாஸ்த்ர கர்த்தாக்களான பகவானாகிய ஸ்ரீ நாராயணன் முதல் மஹரிஷிகளும் வைத்யர்கள்.

வேதவேதாங்கஸ்ம்ருதிகளில் சொல்லிய ௸ தர்மானுஷ்டானங்களை நடத்திவைக்கிற உபாத்யாய புரோஹிதர்களும் வைத்யர்களும் தான். ௸ வைத்யமானது 2 விதம் பத்தியம் தவறாமலிருப்பதொன்று, ச்ரத்தையுடன் ஔஷதம் ஸாப்பிடுவது மற்றொன்று இவ்விரண்டில் ஸாமான்யதர்மங்களை நடை உடை, பாவனைகளால் நன்றாய் அனுஷ்டிப்பது பத்தியமாகும்.

பத்யேஸதி கதார்த்தஸ்ய கிமௌஷத நிஷேவணை:
பத்யேऽஸதிகதார்த்தஸ்ய கிமௌஷத நிஷேவணை:

வேத வேதாங்கச்ரௌதஸ்மார்த்தமான கர்மங்களில்-அதிகாரமில்லாத-ஸ்த்ரீ சூத்ரர்களுக்கு-பத்ய ரூபமான-ஸமான்ய தர்மானுஷ்டானமே வ்யாதிகளை உண்டு பண்ணாமல்-திவ்யதேஹத்தைக் கொடுத்து நித்யானந்தத்தையும் கொடுத்துவிடும். ப்ராம்மணாதி-3-வர்ணத்தார்கள் ச்ரௌத ஸ்மார்த்த கர்மானுஷ்டானமாகிய ஔஷத ஸேவையை பக்தி சிரத்தையுடன் செய்து வந்தபோதிலும் அவர்களிடம் ௸ ஸாமான்ய தர்மானுஷ்டானம் இல்லாத பக்ஷத்தில்-பத்தியக் கெடுதலால்-ஔஷத சக்தியும் கெட்டு, வ்யாதி நிவர்த்தி ஏற்படாதது போல்-ச்ரௌத ஸ்மார்த்த கர்மங்களுக்கு சக்தி குறைந்து சீக்கிரமாக பலன் கொடுக்காது.

தற்காலம்-நம்மைவ்யாதியுடன் ரேழியில் யார் தூக்கிப் போட்டிருக்கிறான்? எதற்காக ஸனாதன தர்ம வைத்யம் நமக்கு?என்று சிலர் நினைக்கக்கூடும். இவ்விதம் நினைப்பது தவறு. முந்தின ஜன்மத்தில் மனுஷ்யனாகப் பிறந்து-புண்யத்தை மாத்திரம் செய்திருந்தால்-தேவனாக ஆகிவிடுகிறான். பாபத்தை மாத்திரம் செய்திருந்தால்-பசு பக்ஷ்யாதி ஸ்தாவர ஜன்மம் வருகிறது. புண்யம் பாபம் இரண்டையும் செய்திருந்தால் புண்யத்தினால் மனிதனாகப் பிறந்து பாபத்தினால் கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்கிறான். சிலருக்கு புண்யாதிக்யத்தால் கஷ்ட நஷ்டம் வராதிருந்தாலும் ஆலமரத்தின் அவயவம் முழுமையும் அணுவாயுள்ள ஒரு விதையில் லயப்பட்டு அது முளைத்த பிறகு முன் மரத்தைக் காட்டிலும் பத்து மடங்கு அதிக விஸ்தாரமாவது போல் முன் செய்த பாபம் குறைவாகயிருந்த போதிலும் அது ஜீவனிடத்தில் லயப்பட்டிருந்தது. மனிதனாகப் பிறந்த பிறகு (ப்ருஹதா-உபனிஷத்தில் 3-வது ப்ராம்மணம் 1-வது அத்தியாயம்) 1 முதல் 6 மந்திரம் வரையில் சொல்லியது போலும். பகவத் கீதையில், (அதகேநப்ரயுக்தோந) என்று அர்ச்சுனன் கேட்டதற்கு. (இந்த்ரியாணி-ச்யதே) என்ற வரையில் பகவான் சொல்லியது போலும்.) மனிதனிடத்தில், பூர்வ புண்ய வாஸனையை காட்டிலும் 10 மடங்கு அதிகமாக பாபவாஸனை மனதில் புண்ய வாஸக்கியிட நருடுக்காமல் முளைத்து. கண், மூக்கு, காது, நாக்கு, த்வக்கு இந்த ஐந்திலும் பரவி நின்றுகொண்டு (ப்ரம்ம தேவர் காச்யபர் மூலமாய் 33-கோடி தேவர்களையும் 66-கோடி அசுரர்களையும் ஸ்ருஷ்டித்திருக்கிறபடியால்-புண்யத்தைக்காட்டிலும் - பாபம் அதிகமானது ஆகையால் -) பாபமான கார்யங்களை பூர்வஜன்மத்தில் நடத்திய கார்ய வாஸனையானது இந்த ஜன்மத்தில் வருவதைப்பற்றி எல்லா மதஸ்தர்களும் ஒப்புக்கொண்ட விஷயம். இல்லாத பக்ஷத்தில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியான சுவபாவம் ஏற்படக் காரணம். வாஸனையைத் தவிர வேறில்லை. இந்த வாஸனையானது தீண்டிய ஜந்துவின் விஷ வேகமானது மந்த்ரங்களாலும், ஆரம்பமான க்ஷயரோகமானது ஔஷத சாந்திகளாலும் நிவர்த்திக்கப்படாமல் உதாஸீனமாக கவனிக்காமலிருந்து விட்டால் தேஹத்தை சீக்கிரத்தில் கொன்று விடுவது போல ஸனாதன தர்மானுஷ்டானமாகிய ௸ இருவித வைத்யங்களால் பூர்வஜன்ம பாப கர்ம வாஸனைகளாகிய ரோகம் நிவர்த்திக்கப்படாத பக்ஷத்தில் ௸ ரோகமானது இந்த ஜன்மத்திலும் அதிகரித்து மறுமையிலும் நரகாதி கஷ்டங்களை விளைவிக்கும் (அமார்கேண ப்ரவ்ருத்தானும்) என்ற ௸ 2 ச்லோகங்களின் தாத்பர்யம் இதுதான்.

(ந.நி.)

ஸ்ரீ மஹாபாரதச்சுருக்கம் ஆதிபர்வம்

ஸ்ரீமான் சேங்காலிபுரம் பஞ்சாபகேசய்யர் அவர்களால் எழுதப்பட்டது.

விலை அணா 0 8 0

கிடைக்குமிடம் :— ஜனார்த்தன அச்சுக்கூடம், கும்பகோணம்

ஸ்ரீ ராமா எலிமெண்டரி பாடசாலை கும்பகோணம்.

ஸ்ரீ திவான்பகதூர் வி. கே. இராமானுஜாச்சாரியார் அவர்களால் 12—5—1932ல் திறக்கப்பட்டது. மானேஜர் :— ஸ்ரீ வி. விஜயராகவாச்சாரியார் ரிடயர்ட் டிப்டி இன்ஸ்பெக்டர். தலைமை ஆசிரியர்:— ஆர். ராமிர்தாச்சாரியார்.

இப்பாடசாலையில் 4-2-1940 ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு ௸ பாடசாலை "பெற்றோர் சங்கஆரம்பவிழா நடைபெற்றது. அவ்வமயம் நமதுநகர், கல்லூரியின் ரிடயர்ட் பிரின்சிபால் ஸ்ரீ டி. கெ. வேங்கடராமய்யர், எம். எ , எல். டி., அவர்கள் தலைமை வகித்தார்கள் கும்பகோணம் ரேஞ்சு பாட சாலைகளின் இளைய உதவிசோதனையாளராகிய ஸ்ரீ. கெ. எல். பழனிசாமிபிள்ளை, பி. எ., எல். டி., அவர்கள் " தந்தை மகற்காற்றுமுதவி" என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார், அப்பாடசாலை சிறுவர் சிறுமிகள்நடத்திய ஆடல், பாடல், கும்மி, சம்பாஷணைமுதலானவைகள்பெரிதும் போற்றத்தக்கது. ௸ பாடசாலை தலைமை ஆசிரியர். ஆர். இராமாமிர்தாசாரியாரும், மற்றும் அப்பாடசாலையிலுள்ள உதவி ஆசிரியர்களும் குழந்தைகளுக்கு அழகு பெறபயற்சி அளித்திருப்பது நன்கு மதிக்கப்பட்டது. ௸ விழாவிற்கு பலபிரமுகர்களும், பெற்றோர்களும், பாபனாசம் ரேஞ்சு, பாடசாலைஉதவி சோதனையாளர் ஸ்ரீ. எ. ஸ்ரீனிவாஸய்அயங்கார், பி, எ., எல். டி., அவர்களும், பலபாடசாலையின் ஆசிரியர்களும் விஜயம் செய்திருந்தனர், (ஒ. நி.)

திண்டுக்கல்

திண்டுக்கல் வர்ணாச்ரமஸ்வராஜ்ய ஸங்கத்தின் ஆதரவில் கும்பகோணம் அத்வைத சபா பண்டிதரான "சாஸ்திர ரத்னாகரம்" ப்ரம்ஹ ஸ்ரீ விச்வநாத சாஸ்திரிகளவர்கள் (திருவையாறு) ஸ்ரீ சங்கராச்சார்யார் மடத்தில் சென்ற 21, 22 23-1-40 தேதிகளில் "வேதாத்யபனம்" "ஸ்திரீதர்மம்" "ஆசாரம் என்னும் விஷயங்களைப் பற்றிஉபன்யாசங்கள் புரிந்தார்கள். (ஒ.நி.)

விருத்தாசலம்

மகோத்ஸவம்

இத்தலம் திருக்கோயில்கொண்டுவழிபடுவார்க்கு வேண்டும் யுத்தி முக்திகளைத்தந்தருள் ஸ்ரீ விருத்தாம்பிகை பாலாம்பிகை சமேத பழமலைநாதர்க்கு வழக்கம்போல நிகழும் பிரமாதி௵ மாசி௴ 2உ புதன்கிழமை பஞ்சமுக மஹத்துவஜாரோஹணமாகி மகோற்சவம் நடைபெறும். அன்பர்கள் வந்து கண்டு வேண்டாதவைகளை நீக்கி, வேண்டும் நலன்களைப் பெற்று இன்பமுறல் வேண்டும்.

வே. வேஸா. சர்மாவின் பிரசுரங்கள்.

சங்கரோபதேசம்	2	0	0
பத்ம புராணம்	0	12	0
மார்கண்டேய புராணம்	0	6	0
வாமந புராணம்	0	6	0
வைகுண்ட ஏகாதசி	0	0	6
ஸ்ரீ ஸ்துதிகுஸுமாஞ்சலி	0	1	0
ப்ரஹ்மவைவர்த்தபுராணம்	0	12	0
கூர்மபுராணம்	0	6	0
ப்ரஹ்ம புராணம்	0	12	0

கிடைக்குமிடம்:— ஸ்ரீஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்.

ஸ்வதந்திர தாஹம்.

(கே. வரதாச்சாரியார் பீ. ஏ. பீ.எல்.,)

ஸ்வராஜ்யம் வேண்டியதுதான் ஆயினும் நாம் தகுந்த முறையில், தகுந்த பிரயாசை எடுத்துக்கொள்ளாமலேயே, நமக்கு பிரிடிஷார் ஸ்வராஜ்யத்தை தானமாக அளித்துவிடுவார்கள் என்று எதிர்பார்ப்பது வீண் அல்லவா?

உலகத்திலுள்ள எல்லா தேசங்களுமே இப்பொழுது புதிய அரசியல் முறையையோ, புதிய அரசியல் தலைவரையோ, விரும்பி அதை அடைய பாடுபடுகின்றன. பழயது போதும், வேறு ஒன்று புதிதாகவேண்டும் என்கிற உணர்ச்சி எங்கும் தலைதூக்கி நிற்கிறது. இது முன்னேற்றத்தின் அறிகுறியா? இல்லவே இல்லை. மனிதனின் அத்ருப்தியையும் அறியாமையையும் தான் விளக்குகிறது.

ஸமூகத்தை ஸரியாக திருத்தி அமைத்துக்கொள்ளாதவரையில் முன்னேற்றம் எப்படி ஏற்படமுடியும்? உலகில் வாழ ஒவ்வொருவரும் மற்றவருடைய உதவியையும் உழைப்பையும் எதிர்பார்த்துத்தானே ஆகவேண்டும். தேசங்களாகட்டும் தனிப்பட்ட நபர்களாகட்டும், பிறர் உதவி இன்றி வாழ இயலாதாகையால், ஸமூகத்தை அதற்கு இணங்க அமைத்துக்கொள்ள வேண்டியது அத்யாவச்யம். அப்படி ஸரியாக ஸமூகம் அமைக்கப்பட்டுவிட்டால் அந்த தேசத்திற்கோ அந்த அங்கத்தினர்களுக்கோ, பிறகு யாதொரு துன்பமோ வறுமையோ இல்லை. ஆள்பவரும் ஜனங்களின் வேலையாள் என்று உணர்ந்தே ஆகவேண்டும். ந்யாய விரோதமாக ஆண்டுவிடமுடியாது. நல்ல ஆட்சி என்பது அரசியல் முறையையோ அரசாளும் வ்யக்தியையோ பொறுத்தது அன்று. அது ஸமூஹ அமைப்பைச் சார்ந்தது. ஸமூஹம் ஸரியாக மட்டில் அமைக்கப்பட்டிருந்தால் விதேசி அரசும் அந்யாயமாக ஆள இயலாதே.

விதேச அரசுக்குட்பட்ட தேசமும் ஸ்வராஜ்யம் பெறுவதென்றாலோ, பெற்றதை வைத்துக் காப்பதென்றாலோ, ஸமூகத்தை ஸரியாக அதற்கு ஏற்றவாறு அமைத்துக்கொண்டு ஒற்றுமையையும் உணவையும் குறைவின்றி வளர்க்கவேண்டும். அதை செய்துகொள்ளாமல் ஸ்வராஜ்யத்திற்காக போர் புரிய முயலுவதே வ்யர்த்தம். அப்படியே, ஸ்வதேசமும் வேறு ஒரு அரசியல் முறையை நிர்மாணிக்கப்படும் பாடும் வ்யர்த்தமே ஆகும். உணவை உண்டே வாழவேண்டிய அரசும், அரசை நடத்துவோரும், எப்பொழுதும், உணவை உண்டு பண்ணும்ஜனங்களின் அடிமையேயல்லவா? அந்த உணர்ச்சி ஏற்பட்டுவிடின் அந்யாய ஆட்சிமுறை ஓங்க அவகாசம் ஏது?

ஆகையால் அரசியல் சாஸ்திரம் என்பது ஸமூஹ நிர்மாண சாஸ்திரத்தின் ஓர் பகுதியே ஆகும். மேல் தேசங்களில் இந்த ஸமூஹ நிர்மாண சாஸ்திர தத்வம் ஸரியாக அறிந்துகொள்ளப்படவில்லை. அவர்களிடமிருந்து அரசியல் நிர்மாண ஞானத்தைமட்டில் நாம் பெறவேண்டும் என்று நினைப்பதும் வீண். வெள்ளையருக்கு பதிலாக நம் நாட்டு மனிதர்களைப் புகுத்தி அதே அரசியல் முறைகளை நடத்துவதால் பிரயோஜனம் ஏற்படுவதில்லை. அல்லது முடிமன்னருக்கு பதிலாக தொழில் சங்கத்தோரை அரசுபுரிய விடுவதினால் நன்மை ஏற்பட்டுவிடாது. மருந்துகளை மாற்றுவதால் வ்யாதி குணமடைந்துவிடும் என்பதில்லை. வ்யாதியின் காரணத்தை சரியாகக் கண்டுபிடித்துவிட்டால்தான் குணம் ஏற்பட ஹேதுவாகும்.

தற்கால ஸமூஹ அமைப்புமுறைகள் ஸம்ஹார ரூபமாகவே இருந்துவருகின்றன. பிறரை நேர்முகமாக, கொன்றோ மறைமுகமாக உணவின்றி வாட்டியோ, மனிதன் தன் காலக்ஷேபத்தை நடத்த முற்பட்டுவிட்டான். யாவரும் வாழவோ, அவரவர்கள் தங்கள் தங்கள் இயற்கைக்கு அனுகுணமாக வளரவோ ஏற்ற நிலமையை இன்றும் மேல் தேசத்திய ஸமூஹ நிர்மாண சாஸ்திரம் கண்டுபிடிக்கவில்லை. நமது தேசத்திய சாஸ்திர ஞானத்தையும் நாம் இழந்துவிட்டோம். சாஸ்திர அப்யாஸமும் இல்லை. அதை இஹலோகத்திற்கு உபயோகிக்க வேண்டுமென்ற எண்ணமும் நமக்கு இல்லை உதரபோஷணாதிகளுக்காக ஆங்கிலம் கற்றோம். அந்த ஆங்கில பாஷையினாலேயே முற்றிலும் நாம் ஜயிக்கப்பட்டு, ஸ்வய ஞானத்தையும் ஸ்வதேச, ஸ்வமத, ஸ்வ ஆத்ம ஞானத்தையும் இழந்து, ஸமூஹ கட்டுப்பாடு குலைந்து, தேசிய ஸ்தாபனங்களை கைவிட்டு, உணவுப்பொருள்களை அதிகமாக வ்ருத்தி செய்யவும் அறியாமல் போர்புரிந்து வாழக்கூடிய பக்தியையும் அடையாமல், வீணாக பரிதவிக்கின்றோம்.

ஆங்கிலம் கற்றும் நம் தேசத்திற்கு பயனில்லை. உணவுக்காகவும் நம்முடனேயே நம்மைப்போலவே ஆங்கிலேயர்களும் தவிக்கிறார்கள். இருவருக்கும் இங்கு இடமில்லையோ என்று தோன்ற ஆரம்பித்துவிட்டது. நம்முடையபுத்தியையும் நம்முடையஉழைப்பையும் தங்கள் கார்யத்தில் பலன்படுத்திக் கொண்டுவரும் ஆங்கிலேயர் நமக்கு தேசிய முன்னேற்ற ஞானத்தை புகட்டுவதில்லை. நம் தேசிய பண்டைஞானத்தையும் இழந்து புதிய மேல்நாட்டு ஞானத்தையும் அடையாத நாம் ஸ்வதந்திரர்களாக ஆகிவிடினும் வாழமுடியாது.

ஆத்மஞானம் நிறைந்த தேசம் என்றுதான் இதற்குப்பெயர். ஆயினும் தற்காலம் அதையும் காணோம். வேகமாகவும் உருக்கமாகவும் பேசத்தெரிந்த ஒவ்வொரு ஆங்கிலேயருக்கும் நாம் அடிமையாகிவிட்டோம். மூட அறிவு என்று இதரர்கள் நம் தர்ம ஸ்தாபனங்களையும் கோயில்களையும் இகழ்ந்தால் அதையும் நாம் ஒப்புக்கொண்டு நம் மதப்பற்றுதலை துறந்து அந்யமதஸ்தர்களின் முன், தலையை தொங்கவிட்டுக்கொண்டு நிற்கிறோம். பிரயோஜனத்தை எதிர்பார்த்து மதத்தையும் விட்டோமே!

ஆத்மஞானம் அடைந்து ஈசுவரனுக்கும் மேற்பட்ட ஸித்திகளை அடைந்து, சக்ரவர்த்திகளையும் சஸ்திர வீரர்களையும் தங்களிடம் பக்தியிலீடுபடும்படி செய்துகொண்டுவந்த நம் ச்ரேஷ்டர்கள் மேல்நாட்டாரின் ஒழுக்கங்களையும் வித்யாமுறைகளையும் பின்பற்றியதில் ஆத்மோத்ஸர்கமும் அவதிப்படுவதுமே உயர்ந்த லக்ஷ்யங்கள் என்று கொண்டாட ஆரம்பித்துவிட்டனர். ஹிம்ஸையை அறவே ஒழித்துவிடவேண்டும் என்றுதான் சொல்லுகிறார்கள். ஆனால் அனுஷ்டானத்தில் உணவின்றி ஆயுதம் இன்றி, ஸ்வய அறிவு இன்றி வாடும் குடிகளை தின்று பறித்து யுத்த ஸன்னத்தர்களான மேல் தேசத்தோரை வெறுக்கவோ வாழக்கற்றுக் கொடுக்கிறார்கள். ஆங்கிலம் கற்று, ஆங்கில எண்ணங்களிலேயே வளர்ந்த நாம் அஹிம்ஸையை உபதேசித்தபோதிலும், நமது துக்கங்களுக்கும் துன்பங்களுக்கும் வறுமைகளுக்கும் ஐரோப்பியர்கள்தான் வெறுக்கத்தக்க மூலகாரணம் என்று ஜனங்களுக்கு போதித்துவருவதால், நமது கொள்கைகள் பரஸ்பர விருத்தங்களானவைகள் அல்லவென்று ஏற்படவில்லையா?

ஆகையால், இந்த நிலமையில் பகுத்தறிவை பிரதானமாகக்கொண்ட நாம் செய்யு

மதிப்புரை.

ஸ்ரீ ஸுப்ரம்மண்ய பூஜா விதானம்.

மேற்படி பெயர் கொண்ட சிறந்த புஸ்தகமொன்று நமது பார்வைக்கு வந்திருக்கிறது. இப்புஸ்தகத்தில் ஸ்ரீ ஸுப்ரமண்யக் கடவுளைப் பூஜிக்க வேண்டியதற்கான விதிகள்விவரமாகச்சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் 17 விஷயங்கடங்கி யிருக்கின்றன. முதலில் ஸ்ரீமதாசார்ய சங்கர பகவத் பாதாசார்யாள் அருளிய மஹா கணேச பஞ்சரத்னம் ஐந்து சுலோகங்கள் காணப்படுகின்றன. இவ்வைந்து சுலோகங்களும் வெகு அழகான நடையில் அமைந்திருப்பதால் கணேசத்யானம் செய்பவர்களுக்கு மிகுந்த மன அமைதியையும், உத்ஸாஹத்தையும் கொடுக்கக்கூடியவையா யிருக்கின்றன. ஒவ்வொருவரும் அதிகாலையில் இவ்வைந்துசுலோகங்களையும் அநுஸந்திப்பதால் மிகுந்த பலன் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

இதைத்தவிர ஸ்ரீஸுப்ரம்மண்யமானஸிக பூஜை, பாஹ்ய பூஜை, ஷோடசநாமஸ்தோத்திரம், ஷோடச நாமாவளி, ஸ்ரீ ஸுப்ரம்மண்ய ஸஹஸ்ரநாமம், மேற்படி,நாமாவளி, தேவசேனாஷ்டோத்தரசத நாமாவளி, ஸ்ரீ ஸுப்ரமண்ய அஷ்டோத்தர சதகம் முதலான 17 முக்ய விஷயங்கள் அடங்கியுள்ளன. இந்த பூஜாவிதி புஸ்தகத்தில் காட்டியுள்ள வழிப்படி ஸ்ரீ ஸுப்ரமண்ய பூஜை செய்து வருவோர்க்கு ஸகல க்ஷேமங்களும் கிடைக்குமென்று இப்புஸ்தகத்தைப் பார்த்த நாம் கூறுவது அவச்யமாகிறது. ஒவ்வொரு கிரஹத்திலும் இப்புஸ்தகம் பூஜையிலும், பூஜைக்கும் இருக்க வேண்டியதவச்யம். கிரந்த லிபியில் உள்ளது. விலை அணா ஆறு.

தபால் செலவு தனி.

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம் லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு கும்பகோணம்.

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்

மூலம் நாகரத்திலும், தமிழிலும்,

ஸ்ரீமான் G.V,கணேசய்யர், B.A.,B.L.,

எழுதியது.

ஸ்ரீ வித்யை, ஸ்ரீ பாஸ்கரராயருடைய சரித்திரம், ந்ருஸிம்ஹாநந்தநாதர் பரிபாஷா ச்லோகங்கள் முதலியன அடங்கியவை.

ஸ்ரீ அம்பாள், ஸ்ரீ பாஸ்கரராயர்,

ஸ்ரீ சக்ரம் படங்களுடன் கூடியது.

விலை ரூ 4.] [தபால் V. P. P. சிலவு தனி.

கிடைக்குமிடம்.— ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்,

லலிதா த்ரிசதீ

நாகரலிபியில் மூலமும்,

நாமாவளியும் விலை 0—3—0

வேண்டியது என்ன? உலகத்திற்கு விளக்க வேண்டியது என்ன? முக்யமாக அரசியல் முறையை மாற்றி அமைப்பதால் மட்டில் ஸ்வயராஜ்யம் அடைந்தவர்களாக ஆகிவிடமாட்டோம் என்று உணரவேண்டும்.

இந்தியன் திங்கர்—

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கைகண்ட இந்திய மருந்து இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்.

RINGWORM OINTMENT
AMRUTANJAN Ltd.
BOMBAY, MADRAS, CALCUTTA.

வெளியூர்ச் செய்திகள்.

செங்கற்பட்டு

ஜனவரி முதல்வாரத்தில் பிரம்மஸ்ரீ ரிடையர்டு போஸ்டுமாஸ்டர் வி. விச்வநாதய்யர் அவர்கள் க்ருஹத்தில் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களால் "த்ருவ சரித்ரம்" "ஜடபரதோபாக்யானம்" இரண்டு சரித்ரங்களும் உபன்யஸிக்கப்பட்டது.

ஜனவரி 2வது வாரத்தில் இவ்வூர் டிரயினிங் ஸ்கூல் உபாத்யாயர் டி கே ஸுந்தரேசய்யர் அவர்கள் க்ருஹத்தில் பிரம்மஸ்ரீ அனந்தருமதீக்ஷிதர் அவர்களால் "அக்ரூராகமனம்" "ஸ்ரீ வாமனுவதாரம்" இரண்டு சரித்ரங்களும் உபன்யஸிக்கப்பட்டது.

(ந. நி.)

திருக்கழுக்குன்றம்

பொதுக்கூட்டம்.

25—1—40 வியாழக்கிழமை செங்கற்பட்டு ஜில்லா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் ஆகரவில் திருக்கழுக்குன்றத்தில் ஆஸ்திக ஹிந்துக்களின் பொதுக்கூட்டம் ஸ்ரீ த்ரிபுரஸுந்தரி ஆலயத்தில் நடைபெற்றது. செங்கற்பட்டு ரிடைர்டு போஸ்டுமாஸ்டர் பிரம்மஸ்ரீ வி விச்வநாதய்யர் அவர்கள் அக்ராஸனம் வகித்தார்கள். அக்ராஸனாதிபதிகள் முகவுரையாக பேசியபின் பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கஸ்தாபனத்தின் அவச்யத்தைப்பற்றி விஸ்தாரமாக உபன்யஸித்தார்கள். பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

(1) திருக்கழுக்குன்றம் 'வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்' ஒன்று கீழ்க்கண்டவர்களை உத்யோகஸ்தர்களாகக்கொண்டு ஸ்தாபிக்கப்பட்டதாக தீர்மானிக்கப்பட்டன.

பிரஸிடெண்ட் பிரம்மஸ்ரீ யக்ஞேச்வர காரியதர்சி, பொக்கிஷதார் ஸ்ரீ குமாரஸாமி குருக்கள், அங்கத்தினர்கள்:— வேதாசல குருக்கள், ஸ்ரீ கிருஷ்ணய்யர், அண்ணாமலை தேசிகர், (2) மதுரையில் ஸ்ரீ என். நடேசய்யர் தலைமையில் நடைபெறும் ஆலய பிரவேச எதிர்ப்பு இயக்கம் முதலியவைகளை இக்கூட்டம் மனப்பூர்வமாய் ஆதரிக்கிறது.

(3) சென்னை சட்டஸபையில் நிறைவேற்றப்பட்டிருக்கும் ஆலயப்பிரவேச சட்டத்தை பலமாய்க் கண்டிப்பதுடன் மேதவைஸ்ராய் சென்னை கவர்ன்மெண்ட் இவர்களை ஷ்டி சட்டத்தை ரத்துசெய்யும்படி கேட்டுக்கொள்வதாயும் தீர்மானிக்கப்பட்டது.

(4) இக்கூட்டம் சாரதாசட்டம் முதலிய அதர்மச்சட்டங்களையும் பலமாய்க்கண்டிக்கிறது.

(5) இவ்வூரில் நடக்கும் வேத பாடசாலையை இந்த ஸங்கத்தின் ஆதரவில் நடத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

செங்கற்பட்டு ஜில்லா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க உப காரியதர்சி பி என் நாராயண சாஸ்திரிகளால் பிரேரேபிக்கப்பட்டு ஸதாசிவ அய்யர் முதலியவர்களால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது. (ந. நி.)

சென்னை

ஸ்ரீ சண்டியாகம் ! பலவகையிலும் நாடு துன்பமடைய, சிவ பக்தர்கள் தன்தன் வழியால் அதை அகற்ற முயல்கின்றனர். சென்னை ப்ரும்மவித்யா விமர்சக சங்க அங்கத்தினரும் ஸ்ரீ லலிதோபாக்யான பிரசுரதாரருமான ஸ்ரீமான் நாராயணஸாமி அய்யர் எம். ஏ., அவர்கள் புரசைபாக்கத்தில் பிரும்ம ஸ்ரீ வரகவி நா. சுப்ரமண்பய்யர் தலைமையில் ஷ்டி யாகத்தைச் செய்தார். அய்யர் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா முதலிய பல பண்டிதர்கள் வந்திருந்தனர்.

லோகக்ஷேமார்த்தமென ஸங்கல்பம் செய்து விதிப்படி ஆவரண ஹோமம் ஸப்தசதீ ஹோம பூர்ணாஹுதி கன்யகா பூஜை பிராமண ஸமாராதனை முதலியன மிக சிறப்பாக நடந்தன. சொந்த செலவில் இவ்வுத்தம காரியத்தைச்செய்த அய்யரை எல்லோரும் நன்கு ஆசீர்வதித்தனர். ஸபையங்கத்தினர் எல்லோரும் ச்ரத்தைகாட்டினர். இவர் பூர்ண வைதிக ஆசாரத்தைக் கைப்பற்றும்படி தேவி அருள்புரிய வேண்டுகிறோம். ந-நி.

ஆழ்வார் திருநகரி

ஆஸ்திக மாதர் சங்கம்

(நமது விசேஷ நிருபர்)

ஆழ்வார் திருநகரில் சென்ற புதனன்று ஆஸ்திகர் மாதர்சங்கமொன்று நிறுவப்பட்டது. மிராசுதார் ஸ்ரீமான் டி. தெய்வச்சிலை அய்யங்கார் பி. ஏ. பி. எல். மனைவி ஸ்ரீமதி நாச்சியார்ஜானகி தலைவி. ஸ்ரீமதி பூக்குட்டி ஜானகி உபதலைவி ஸ்ரீமதிகள் அழரு அம்மாள் பொக்கிஷதார் வேப்பிலைஜானகி வைகுந்தம் இருவரும் காரியதரிசி உதவிகாரியதரிசியாகும். சர்க்காரோ, சட்டசபையினரோ பெண்பாலர்கள் விஷயமாய் செய்யும் சட்டங்களைப்பற்றி அபிப்ராயம் தெரிவித்தலும் ஆழ்வார் திருநகரி வர்ணாஸ்ரம சனாதனதர்ம ஸஹபாடிகளை அனுசரித்து பொதுவிஷயங்களில் நடத்தலும் சபையின் நோக்கமாகும், சங்கத்தில் அங்கத்தினராகும் ஒவ்வொரு பெண்மணிகளும் வருடத்துக்கு நான்கணா சந்தா செலுத்த வேண்டியதாகும்.

திருவல்லிக்கேணித் தமிழ் சங்கம்

பெரியார் பிரிவுக் கொண்டாட்டம்

காலஞ்சென்ற ஸ்ரீமான்பி. டி. ஸ்ரீநிவாஸய்யங்கார், (விருதுநகர்), ராவ்சாஹிப் பி. வி. ரங்கஸ்வாமிஅய்யங்கார்(திருவல்லிக்கேணி) இவர்களின் பிரிவாற்றாமையைக் குறித்து திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் 3—2—40உ சனிக்கிழமை மாலை 5மணிக்கு திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீ. ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமி தலைமையில் ஒரு கூட்டம் ஆரம்பமாகியது. தலைவர், காரியதரிசி, குரிஞ்குப்பாடி வித்வான் துரைசாமி அய்யங்கார், திருவிண்ணகர் வித்வான் ஸ்ரீதேசிகமய்யங்கார் முதலியோர் பரமபதித்த ஸ்வாமிகளின் குணங்களைப் பரக்கப் புகழ்ந்து பேசினர். சபை மாலை 7. 15கணிக்கு நிறைவெய்தியது. (ந-நி)

காஞ்சீபுரம்

அரிய உபந்யாஸம்

பல அறிஞர்களின் வேண்டுகோட்கிணங்கி தமிழ்ச்சங்கத்தலைவர் ஸ்ரீ. ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமி பெருமாள் கோயில் என்ற சின்னக் காஞ்சீபுரத்துக்கு 4—2—40உ ஞாயிற்றுக்கிழமை சென்று ஸ்ரீதேசிக தர்சனாச்ரமத்தில் பிற்பகல் 3மணிமுதல் 5. 15 வரை "ஆழ்வார் வைபவமும் அவரைத் தமிழ்க்கவிகள் கொண்டாடிய முறையும்" என்ற விஷயம் பற்றி வெகு அழகான ஒருபந்யாசம் செய்தார். சங்க காரியதரிசியும் உடன் சென்றிருந்தார். அங்கு வந்திருந்த திருவயிந்தை நகரவாசிகள் அவடமும் எழுந்தருள வேண்டுமென இவர்களைப் பிரார்த்தித்துள்ளனர். (ந-நி)

பஞ்சாக்ஷர அகவல்

ஷடாக்ஷர அகவல்

அகத்திய மகா முனிவர் அருளிச்செய்த இவைகள் குருபதேச முறைப்படி பரிசோதித்து சுத்தப்பதிப்பாக பட்டீச்சுரம் ரேடிவ் டாக்டர் ஸ்ரீமான் எம். கே. ஸாது ஸ்ரீ இராமஸ்வாமி சர்மா அவர்களால் பதிப்பிக்கப் பெற்றன. விலை அணா 4.

கிடைக்குமிடம் ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட்., கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.